# ஆறுமுக நாவலரின் வழிகாட்டலில் சைவ ஒழுக்க வாழ்வியல் - ஒரு சமகால நோக்கு

மாரிமுத்து பிரகாஷன்
தத்துவவியல் விரிவுரையாளர்
தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்**

*சமயங்கள் மனித வாழ்க்கையினை மேம்படுத்தி ஒவ்வொருவரும் சமூகத்தில் சிறந்த நிலையை அடைவதுடன் மறுமையிலும் நற்பேறு பெறுவதற்கான வழிகாட்டல்களை வழங்குபவையாக உள்ளன. ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ்சோதியான சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயத்தின் வழிகாட்டல்கள் இவற்றில் மிகச் சிறப்புடையவையாகும். தமிழர் நாகரிக வளர்ச்சியும் சைவ சமயமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையாகும். வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் புற மதங்களின் தாக்கத்தினால் சைவ வாழ்வியல் சவாலுக்கு உள்ளாக்கப்பட்ட போது பல்வேறு சமயக் குரவர்கள் அதனைப் பாதுகாத்து , நெறிப்படுத்தியுள்ளனர். அவ்வாறான ஒரு சவாலே ஆறுமுக நாவலரின் காலத்தில் ஆங்கிலேயேர்களினால் ஏற்படுத்தப்பட்டது. இதன்போது சைவம் பின்பற்றுவதற்குரியதல்ல, அதன் தெய்வங்கள் வணங்குவதற்குரியவை அல்ல என்று கூறப்பட்டு சைவ வாழ்வியலை கீழ் நிலையாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது ஒரு அவதார புருசராக, சமயக் குரவராக தன்னுடைய தனித்த ஆளுமையினால் சைவ ஒழுக்க வாழ்வியலின் சிறப்பினை பிரசங்கங்கள் , எழுத்துக்கள் ஊடாக வெளிப்படுத்தி அதனை காத்துத் தந்தவர் நாவலர் பெருமான். இன்று சைவம் உலகெங்கும் பரவியிருந்தும் அதன் தத்துவார்த்தங்களை புரிந்து கொண்டு பின்பற்றுவது இல்லாமையானது பல்வேறு சமய சமூக ஒழுக்கவியல் பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்துள்ளது. இவ்வாறான ஒரு நிலையிலேயே நாவலரின் பெருநோக்கான சைவத்தின் ஒழுக்க வாழ்க்கைக்கான வழிகாட்டல்களை கசடற அறிந்து பின்பற்றுகின்ற ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதனை மனதில் கொண்டு அதன் பொருட்டு அவர் பின்பற்றிய முறைகளையும் , முன்வைத்துள்ள ஆலோசனைகளையும் சம காலத் தேவைக்கு இணங்க பொருத்தப்பாடுடையதாக பிரயோகிப்பதற்கான வாய்ப்புக்களை ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.*

**திறவுச் சொற்கள்**: நாவலர், சைவம், சமயம், ஒழுக்கம்

## ஆய்வு அறிமுகம்

சைவ சமயத்தின் மிகப்பெரும் சவால்களில் ஒன்று அதனைப் பின்பற்றுபவர்கள் சமய நம்பிக்கைகளையும், சடங்குகளையும் அவற்றின் தத்துவார்த்த ரீதியான உள்ளம்சங்களை அறிந்து , பின்பற்றி, பேணி வளர்க்கும் நிலையில் இல்லாமையாகும். குறிப்பாக கோயில்களில் பணியாற்றும் குருமார்கள் மக்களுக்கு நல்வழி கூறி ஆன்மீக , சமூக முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் தகுதியினை வளர்த்துக் கொள்வது குறைவாக உள்ளது. மந்திரங்களை உச்சரிப்பதும் , ஆராதனைகள் செய்வதும் , பிரசாதங்களை வழங்குவதும் போதுமானது என்ற அளவில் அவர்களது செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஆனால் அவற்றினையும் தாண்டி சமூகத்திற்காக அவர்கள் மேற்கொள்ள வேண்டிய சாத்தியமான நற் செயற்பாடுகள் தொடர்பில் பேசியவராகவும், அதற்குரிய வசதிகளை செய்து கொடுத்தவராகவும் நாவலர் பெருமான் செயற்பட்டுள்ளார். மக்களுக்கு நல்வாழ்க்கைக்கான வழிகாட்டல்களை வழங்கக்கூடிய சைவ ஒழுக்க நூல்கள் சுவடிகளாக ஓரிருவரிடத்திலும் , பொதுத்தளத்தில் சாமான்ய மக்கள் அறிந்துகொள்ள முடியாத பாடல் வடிவிலும் இருந்தமையினை மாற்றி அவற்றினை உரைநடைப்படுத்தி , அச்சேற்றி பொதுவெளியில் கிடைக்கச் செய்ததுடன் அவற்றினை தகுதிவாய்ந்தவர்களுக்கு கற்பித்து அவர்கள் ஊடாக ஏனையவர்களுக்கு கற்பிக்கும் செயற்பாடுகளையும் இவர் மேற்கொண்டுள்ளார். அது மாத்திரமல்லாமல் சைவத்தின் பெருமையினை அறியாத நிலையில் அதனை பின்பற்றிய மக்களை



© 2024, IRJTSR

பிற சமயத்தினர் ஏமாற்றி , வஞ்சித்து மதம் மாற்றிக்கொண்டிருந்த காலத்தில் அதனை எதிர்த்து செயலாற்றி தன் கருமம் முடித்தவராகவும் உள்ளார். இவர் மிகப்பெரும் பொருள் பலம் , ஆளணி, திட்டமிடல்கள் என்று செயற்பட்டுக் கொண்டிருந்த கிறிஸ்த மதமாற்றுனர்களுக்கு சமமாக தனியொரு ஆளுமையாக எழுச்சியுடன் செயற்பட்டு சைவ ஒழுக்க வாழ்வியலின் பெருமையினை உணரச் செய்து நிலைபெறச் செய்தவர். இந்த வகையில் இவ்வாய்வுக் கட்டுரையானது பிற மதத்தினராலும் , தத்துவார்த்தமான உண்மையினை அறியாத சைவர்களினாலும் கேலிக்கும் , புறக்கணிப்பிற்கும் உள்ளாக்கப்படும் சைவ ஒழுக்க சிந்தனைகளின் சிறப்பினை முன்நிறுத்தி அதனை பாதுகாத்து வழங்கிய நாவலரது பங்களிப்புக்களை அறிந்து கொள்வதுடன் சமகாலத்திலும் அதன் செயற்திறனை பாதுகாத்து சைவப் பெருமக்களது ஒழுக்க வாழ்வினை மேம்படுத்துவதற்காக பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதாக இந்த கட்டுரை அமைந்துள்ளது.

**நாவலர் அறிமுகம்**

நாவலர் பெருமான் ஒரு தமிழாசிரியர் , மொழி பெயர்ப்பாளர் , பதிப்பாசிரியர், பாடசாலை நிறுவனர் , பாடநூலாசிரியர், உரையாசிரியர், சமய சீர்திருத்தவாதி , பிறசமய எதிர்ப்பாளர் என்று பன்முகம் கொண்டவராக இன்று அறியப்படுகின்றார் (அம்மன்கிளி , 1991, பக்.14). 'இந்து சமயக் காவலராக ' அவர் செயற்பட்டதன் அடிப்படையிலேயே இவை அத்தனையும் உள்ளடங்கியுள்ளன என்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்த ஆறுமுகம் ( 1822 – 1879) என்ற இயற்பெயர் கொண்ட இவரது அறிவாற்றலும் பிரசங்கத்திறனும் இந்தியாவின் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து, 'நாவலர்' என்ற பட்டத்தைப் பெற்றுத்தந்தது. இளமையில் சமய அறக் கல்வியினையும் பன்னிரெண்டாவது வயதில் பீற்றர் பேர்சிவல் பாதிரியாரின் தலைமையில் இயங்கிய வட்டுக்கோட்டை ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலக் கல்வியினையும் திறம்படக் கற்று அங்கே உயர் வகுப்பில் படிக்கும் போது கீழ் வகுப்பு மாணவர்களுக்கு கற்பித்தலையும் மேற்கொண்டார். இருமொழித் தேர்ச்சி கொண்ட இவர் பாதிரியாரினால் பைபிளை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் பணியிலும் அமர்த்தப்பட்டார். அதுவே சிறந்த மொழிபெயர்ப்பாக இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அச்சிடப்பட்டது. இதே காலத்தில் பாதிரியாருக்கு தமிழ் கற்பிக் ;கும் பண்டிதராகவும் செயற்பட்ட சிறப்பினையுடையவராக நாவலர் விளங்குகின்றார்.

பதினான்கு வருடங்கள் பேர்சிவல் பாதிரியாருடன் இணைந்து பல்வேறு கற்றல் , கற்பித்தல், மொழி பெயர்ப்பு செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த காலத்தில் அவர்கள் கிறிஸ்தவத்தை பரப்புவதற்காக நுணுக்கமாக மேற்கொண்ட திட்டமிட்ட செயற்பாடுகளை தெளிவாக அறிந்து கொண்டிருந்தார். இதுவே மேன்மைகொள் சைவநீதியினை வளர் ;ப்பதற்குரிய மார்க்கங்களை பாரிய திட்டங்களாக வகுத்து செயற்படுவதற்கான இயலுமையினை அவருக்கு வழங்கியிருந்தது (நாகேஸ்வரன் , 2012, பக்.9). சைவத்திற்கும் தழிழுக்கும் தன்னை அர்ப்பணித்து அவர் மேற்கொண்ட இச் செயற்பாடுகளே மேற்குறித்த பன்முகங்களுடையவராக அழியாப்புகழைப் பெற்றுத்தந்துள்ளது.

**நாவலர் காலத்து சமய, சமூக நிலைமைகளும் இன்றைய தொடர்ச்சியும்**

1872ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட 'யாழ்ப்பாண சமய நிலை ' என்ற நூலில் கிறிஸ்தவ சமயத்தவர்களின் செயற்பாடுகளினால் பாரம்பரிய சைவ குடும்பங்களிலும் , சமூகத்திலும் எத்தகைய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்பதனை நாவலர் வெளிப்படுத்தியுள்ளார். இதன்படி மிசனரிகளினால் சமய மாற்றம் செய்வதற்கென பின்பற்றப்பட்ட பல்வேறு உத்திகளில் ஒன்றாக கல்விக்கான வாய்ப்பு அமைந்திருந்தது. இதில் தொழில்வாய்ப்பில் முன்னுரிமையினை பெற்றுக்கொள்வதற்காக ஆங்கிலக் கல்வி தேவையாக இருந்த நிலையில் அதனை வழங்கிய கிறிஸ்தவ மிசனரி பாடசாலைகள் விவிலியக் கல்வியினையும் இணைத்து வழங்கியதுடன் அங்கு பயின்ற சைவ சமயத்தவர்களை மதமாற்றம் செய்வதற்குரிய ஊக்குவிப்புக்களையும் , நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்தியிருந்தனர். இதில் சைவம் பொய்ச் சமயம் மற்றும் சைவர்கள் வணங்குபவை சாத்தான்கள் என்று மேற்கொள்ளப்பட்ட இழிந்துரைகளும் உள்ளடங்குகின்றன. இதன் காரணத்தினால் சைவ விழுமியங்களை பூரணமாக அறியாதிருந்தவர்களும், தொழில் வாய்ப்புக்களையும் , பொருளாதார ரீதியான சலுகைகளையும் பெற்றுக்கொள்ள முயற்சித்தவர்களும் கிறிஸ்தவத்திற்கு மாறினார்கள். எனினும் அவர்களில் பலர்



© 2024, IRJTSR 

சைவ சமய பாரம்பரியங்களை இரகசியமாக பின்பற்றியதாகவும் நாவலர் பதிவுகளை மேற்கொண்டுள்ளார்.

ஏறத்தாள நூற்றி எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்த இந்த செயற்பாடுகள் இன்றும் தொடர்கின்றன. சைவ சமயத்தவர்கள் பல தெய்வங்கள் என்ற பெயரில் சாத்தான்களை வழிபடுபவர்கள் என்றும் அவை சிற்றின்பங்களை நோக்காகக் கொண்டவை என்றும் போலிப் பிரச்சாரங்களை செய்வதுடன் பொருளாதார ரீதியாக நலிவடைந்த நிலையில் உள்ள மக்களுக்கு சிறிய உதவிகளை மேற்கொண்டு மதம் மாற்றும் செயற்பாடுகளையும் கிறிஸ்தவ போதகர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான மத மாற்றத்திற்கு மக்கள் சைவ தத்துவங்களை ஆழமாக உணராதிருப்பதும், கிடைக்கக்கூடிய சிறிய பொருளாதார உதவிகளும் காரணமாக இருக்கின்றன. அதேவேளையில் மேலைத்தேய நாடுகளில் கிறிஸ்தவர்கள் பலர் எந்தவிதமான தனிப்பட்ட நலன்களுக்கும் அல்லாமல் , வற்புறுத்தல்களும் இல்லாமல் சைவத்தின் மேன்மையினை உணர்ந்துகொண்டு அதன் பாரம்பரியங்களை விரும்புபவர்களாக , பின்பற்றுபவர்களாக மாறி வருகின்றனர்.

இந்நிலையிலேயே இடர்மிகு காலப்பகுதியில் நாவலர் காத்தருளிய சைவத்தின் பெருமையினை நிலைபெறச் செய்து ஆதியோகியினை அரும்பெரும் தெய்வமாக பின்பற்றி இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து மறுமையிலும் இன்பம் பெறுவதற்குரிய மார்க்கமாக உள்ள சைவத்தின் ஒழுக்க வாழ்வியல் நெறிகளை தெளிவாக அறிந்து பின்பற்றுவது அவசியமாக உள்ளது.

**சைவ ஒழுக்க வாழ்வியல் வழிகாட்டல்கள்**

பெரும் பின்புலங்களுடனும் பொருள் வளங்களுடனும் செயற்பட்ட கிறிஸ்தவ மதப் பரப்புனர்களுக்கு எதிராக தன்னுடைய வாழ்க்கையினையே தமிழுக்காகவும் சைவத்திற்காகவும் அர்ப்பணித்து செயற்பட்ட நாவலர் காத்து வளர்க்க முயற்சித்து பாதுகாத்துத் தந்துள்ள சைவ ஒழுக்க வாழ்வியல் எந்தவொரு புறச் சமயத்தவர் பிற்பற்றும் எந்தவொரு சிறியதொரு விடயத்திலும் குறைபாடுடையது அல்ல என்பதனை புரிந்துகொண்டு சைவர்கள் அவற்றினை வழுவாது பின்பற்றுவது சமகாலத்தில் அவசியமான ஒன்றாக உள்ளது.

தமிழர்கள் பொதுவாக இந்து சமயம் என்ற அடிப்படையில் சைவம் , சாக்தம், வைஷ்ணவம், கௌமாரம், சௌரம், காணாபத்தியம், ஆகிய அறுவகைச் சமயங்களையும் மேலும் பல புற மதத் தெய்வங்களையும் ஒன்றினைத்து வழிபடுபவர்களாக உள்ளனர். ஆனால் நாவலர் சைவ சமயத்தினை முன்நிலைப்படுத்தி அதுவே தழிழர்களது சமயம் என்ற அடிப்படையில் செயற்பாடுகளை முன்னெடுத்ததுடன் பல்வேறு சிறு தெய்வ வழிபாடுகள் , பலியிடுதல் போன்றவற்றினை எதிர்த்தவராக உள்ளார். இவ்வாறு பல தெய்வங்கள் வழிபடப்பட்ட நிலையிலும் வைஸ்ணவர் தவிர்ந்த ஏனைய பிரிவினர் அனைவரும் முழுமுதற் தெய்வமாக சிவனையே ஏற்றுக்கொண்டுள்ளனர். அவரே அடியும் முடியும் இல்லாத அரும்பெருஞ்சோதியாக வழிபடப்படுகின்றார். இந்நிலையில் சைவத்தை முன்நிலைப்படுத்தி அதனை பின்பற்றுபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நியமங்களாக குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் இம்மையிலும் மறுமையிலும் நற்பயனை தருபவையாகும். இதிலும் குறிப்பாக சைவ சமயத்தவர்கள் பின்வரும் இலக்கணமுடையவர்களாக வாழ்தல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றார் (பூலோகசிங்கம் , 2000, பக். 21).

'சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய் , கொலை, களவு கள்ளுண்தல், புலாலுண்தல், பிறன்மனை விழைதல் , வரைவின் மகளிர் விழைதல் , பொய்ச் சான்றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய் , இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையவர்களாய் , குருலக்கணங் குறைவற அமைந்த சைவாசாரியரை அடைந்து சிவதீட்சை பெற்றுக் கொண்டவர்களாய் , விபூதி உருத்திராட்சம் அணிபவர்களாய் , சந்தியாவந்தனம், பஞ்சாட்சர ஜெபம் , சிவத்தியானம், சிவாலய சேவை சிவலிங்க பூசை , குருபாக்கிய பரிபாலனம் , மகேஸ்வர பூசை முதலியவற்றை சிவாகம விதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களே சைவர்களென்று சொல்லப்படுவார்கள்'

இவ்வாறு சைவத்தின் தத்துவங்களையும் , வழிபாட்டு முறைகளையும், சடங்கு முறைகளையும், சிலை மற்றும் ஆலய அமைப்பு முறைகளையும் கூறுகின்ற சிவாகமங்களை பின்பற்றுவதற்குரிய பிரமாணங்களாகக் கொண்டு (பூலோகசிங்கம் , 2000, பக். 39) சைவ சமயிகள் செய்ய வேண்டியவை என்றும், செய்யத்தகாதவை என்றும் , குறிப்பாக திருக்கோயிலின் உள்ளே செய்யக்கூடாத குற்றங்கள் மற்றும் நித்திய கரும விதிகள் என்று காட்டப்பட்டிருக்கும் வழிமுறைகள் ஒருவர் ஆரோக்கியமாக , நற்பிரஜையாக வாழ்வதற்கு அவசியமானவையாகும். இத்தகையதாகி பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் தொடர்பான விரிவான விளக்கங்களை நாவலர் தன்னுடைய பால பாடம் நூல்களில் விளக்கமாக அருளிச் செய்துள்ளார். இவை போன்றவற்றையே பிற மதங்களும் வெளிப்படுத்தியுள்ளன ஆனால் அவை குறித்த விடயங்கள் முறையாக பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காக தங்கள் சமயத்தவர்களுக்கு உரியவகையில் போதனைகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்கின்றனர். இவ்விடயங்கள் சிறுவயது முதற்கொண்டு கற்பிக்கப்பட்டு வருவதனால் அவர்களினால் இயல்பாகவே பின்பற்றப்படக்கூடியதாக உள்ளது. குறிப்பாக சமயக் கடமைகளில் ஈடுபடுபவர்கள் தங்களிடம் வழிபாட்டுக்கு வருபவர்களுக்குத் தேவையான பொருத்தமான வழிகாட்டல்களை வழங்குபவர்களாக உள்ளனர். ஆனால் சைவ சமயத்தில் ஆலயங்களில் குருமார் அத்தகைய வழிகாட்டல்களை வழங்குபவர்களாக இல்லை. இதற்கு அவர்கள் குறித்த விடயங்களில் தெளிவாக பயிற்றுவிக்கப்படாமையும், மக்களுக்கு ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கக்கூடிய பொருத்தமான திறனைப் பெற்றவர்களாக இல்லாதிருப்பதுவுமே காரணமாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டே தன்னுடைய ஐந்தாண்டுத் திட்டத்தை முன்வைத்த நாவலர் பெருமான் 'நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும் , இடையறாத முயற்சியும் , ஆரோக்கியமும் உள்ள பிள்ளைகளைச் சேர்த்து உணவு, உடை, உறையுள் முதலியவற்றை இலவசமாக வழங்கி கல்வி கற்பித்தல் வேண்டும். இப்படிக் கற்று தேர்ச்சியடைந்தவர்களையே ஆசிரியர்களாகவும், சைவப் பிரசாரகர்களாகவும் நியமிக்க வேண்டும்' (பாக்கியம், 1970, பக். 37) என்று குறிப்பிடுகின்றார். இது இலங்கையில் இலவசக் கல்வி ஆரம்பமாவதற்கு ஏறத்தாள நூறு வருடங்களுக்கு முன்னர் நாவலர் முன்மொழிந்து செயற்படுத்திய திட்டமாக நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. இதன் ஒரு முயற்சியாக தன்னிடம் திண்ணைப் பள்ளிகளில் சைவத்தினைக் கற்றவர்களை ஆசிரியர்களாக நியமித்து 1848 இல் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையினை உருவாக்கி செயலாற்றியமையும் , 1864 இல் இந்தியாவின் சிதம்பரத்தில் ஒரு சைவ வித்தியாசாலையினையும் , மெதடிஸ்ற் மிஷனரிமார் கில்னர் ஆங்கிலக் கல்லூரிக்கு திருநீறு அணிந்து சென்றமைக்காக இடைவிலக்கப்பட்ட பிள்ளைகளது பெற்றோரின் வேண்டுகோளிற்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட சைவ ஆங்கில வித்தியாசாலை முதலானவை (அம்பிகைபாகன் , 1969, பக். 47) அளப்பரிய பங்களிப்புக்களாக அமைந்துள்ளன. இவற்றுடன் கொழும்புத்துறை , கோப்பாய், பருத்தித்துறை, ஏழாலை முதலான இடங்களிலும் சைவப் பள்ளிகளை திறந்து சேவையாற்றியுள்ளார் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு கற்றுத் தேர்வதன் ஊடாக சிந்தனையிலும் , உணர்விலும், நடத்தையிலும் ஒழுக்க சீலர்களாக வாழ்பவர்களே ஆலயங்களில் பூசை செய்யத்தக்கவர்களாக , சாதாரண மக்களுக்கு நல்வாழ்க்கைக்கான போதனைகளை வழங்குபவர்களாக செயற்பட வேண்டும் என்பது நாவலரது நிலைப்பாடாக இருந்துள்ளது. இதற்கு சைவர்களது ஒழுக்க வாழ்க்கையினை எழுத்தினாலும் பேச்சினாலும் மாத்திரம் மேன்மைப்படுத்த முடியாது மாறாக அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பூசை செய்கின்ற ஆலயங்களிலே நியதிகள் முறையாக பின்பற்றப்படின் அவற்றை பார்ப்பதன் ஊடாக நற்பயன் அடைய முடியும் என்ற நம்பிக்கையினைக் கொண்டிருந்தமையே காரணமாகும். ஏனெனில் கிறிஸ்தவ வாழ்வியல் வலிந்து புகுத்தப்படுவதற்கான முயற்சியில் முதலில் மேற்கொள்ளப்பட்டது. சைவர்களது வாழ்வியலில் காணப்பட்ட குறைபாடுகளை பெரிதுபடுத்தி இழிவுபடுத்தியமையேயாகும். இக் காரணத்தையிட்டே ஆலய செயற்பாடுகளை மேற்கொள்பவர்கள் கற்றறிந்த ஒழுக்க சீலர்களாக நடந்துகொள்வதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதனை முதன்மையானதாக கருதி செயற்படுத்தினார். இவ்வாறு சமுதாய வாழ்வினை நெறிப்படுத்தும் இடங்களான ஆலயங்கள் ஆகம முறைப்படி அமையப்பெறுதல் முதற்கொண்டு அவற்றிலே சிற்றின்ப நிகழ்ச்சிகள், பலியிடல், சிறுதெய்வ வழிபாடுகள், வியாபார நோக்கு, தனிநபர் பெருமிதம் கருதிய செயற்பாடுகள் , மது, புகை உள்ளிட்ட பிற பல ஒழுக்கச் சீரழிவுச் செயற்பாடுகள் இடம்பெறுவதும் கடவுள் வழிபாட்டுக்கு முதன்மை தராத விடயங்களாக, இல்லாதொழிக்கப்பட வேண்டிய விடயங்களாக பிரகடனப்படுத்தியுள்ளார் (கோபாலகிருஷ்ண ஐயர், 2012, பக். 412). இந்த வகையில் சிறப்பான ஒழுக்க நெறிகளைக் கொண்டுள்ள



© 2024, IRJTSR

சைவ வாழ்வியலில் இடையே புகுத்தப்பட்ட பொருத்தமற்ற சில விடயங்களை தவிர்த்து நல்வழிப்படுத்திய வகையில் சமய சீர்திருத்தவாதி என்ற போற்றுதலுக்குரியவராகவும் நாவலரை நோக்கக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு சமய சீர்திருத்தங்களை புரட்சிகரமாக மேற்கொள்ள முயற்சித்த இவர் அதற்கு சைவ சமய குருமார்கள் பூசைகளிலும் ஆசாரங்களிலும் மாத்திரமே ஈடுபட்டு மக்களிடமிருந்து பணத்தை பெற்று வாழ்க்கை நடாத்தி ஆனால் மக்களுடைய சமூக வாழ்வுக்குரிய வழிகாட்டல்களை வழங்குவதற்குரிய இயலுமையற்று இருந்தமையினை இழித்துரைத்து 'சைவ குருமாருள்ளே பலர் சிவாகமத்தில் ஒரு சுலோகமாயினும் தேவார திருவாசகங்களில் ஒரு பாட்டாயினும் திருவள்ளுவரின் ஒரு குறளாயினும் அறியாத மனிதப் பதர்களுஞ் சைவ சமய குருமாராம்! உங்கள் சைவக் குருமாருக்கு என்ன வேலை ? நீங்கள் வருந்திச் சம்பாதித்துக் கொடுக்கக் கொடுக்க அவர்கள் எளிதில் வாங்கி உண்டுத்திக் கொண்டு வெட்கஞ் சிறிதுமில்லாமல் மாப்பிள்ளை மாடுகள் போலத் திரிகின்றார்களே ' என்று பேசியிருக்கின்றார். இதன் ஊடாக சமயக் குருமாரது கடமை தனியே பூசைகளை செய்வித்து பிரசாதம் வழங்குவது மாத்திரம் அல்ல அதற்கு மேலாக சமூக நல்வாழ்க்கைக்கான வழிகாட்டல்களை வழங்க வேண்டும் என்பதனை உறுதியாக வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு சமயநெறி நின்று நல்வாழ்க்கை வாழ்வதற்கான வழிகாட்டல்களை மேற்கொண்டுள்ளதுடன் மக்கள் வறுமையும் துன்பமும் இல்லாது செல்வமும் ஆரோக்கியமும் பெற்று வாழ்வதற்கான சமூக வழிகாட்டல்களையும் மேற்கொண்டுள்ளார். இதற்கு 'வறுமைக்கும் துன்பத்திற்கும் சகல பாவங்களுக்கும் பிறப்பிடம் மதுபானமேயாகும். ஆங்கிலேயர்கள் சாராய வியாபாரத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளும் வருமானத்தை வேறு வழிமுறைகளின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு முயற்சிப்பார்களேயானால் இலங்கை மக்கள் செல்வமும் ஆரோக்கியமும் பெறுவார்கள் ' என்று இவர் முன்வைத்துள்ள கருத்து இதற்கான மிகச் சிறந்த உதாரணமாகும் (தில்லைநாதன், 1979, பக். 79).

இவ்வாறு நாவலர் மேற்கொண்ட சமயப் பணிகளை அடிப்படையாகக் கொண்டு அவரை 'ஐந்தாம் குரவர்' என்று சிறப்பித்துப் போற்றுகின்ற வழக்கம் அவருடைய காலத்தில் இருந்தது. எனினும் இதனை ஏற்றுக்கொள்ளாத அவர் அதற்கான தகுதியினைத் தான் கொண்டிருக்கவில்லை என்றும் சமயக் குரவர்கள் மேற்கொண்ட பணிகளில் சிறு பங்கையேனும் தான் மேற்கொள்ளவில்லை என்ற கருத்தையும் வெளிப்படுத்தியதுடன் அவ்வாறு தன்னை புகழ்ந்தவர்களை கண்டித்தும் உள்ளார். அதேவேளையில் இவ்வாறு நாவலர் புகழப்பட்டமையினை ஒரு சிலர் கேலிக்கு உள்ளாக்கியபோது அவ்வாறு கேலி செய்வதும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்ற கருத்தினையும் முன்வைத்துள்ளார் (பூலோகசிங்கம், 2000, பக். 34). இது ஒருவர் தான் செய்துள்ள , செய்கின்ற செயற்பாடுகளின் தகைமையினை அறிந்து, ஆனால் ஏற்படக்கூடிய விளைவுகளையே விரும்புகின்றவராக மாறாக தனக்கு தனிப்பட்ட வகையில் புகழ் கிடைப்பதனை எதிர்பார்க்காத , அதேவேளையில் தன்னுடைய தகுதியினையும் உண்மையான கௌரவத்தையும் விட்டுக்கொடுக்காத மனப்பான்மையினை வெளிப்படுத்துவதாயுள்ளது. இவ்வாறு புகழ்வேண்டாத அதேவேளை இகழ்ச்சியை நயமாக மறுக்கின்ற மனப்பாங்கு என்பது சைவ ஒழுக்க வாழ்வியலின் பெருமையினை அறிந்து பின்பற்றுகின்ற மனிதர்களுக்கே சாத்தியமாகும் என்பது இங்கு வெளிப்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது.

**தொகுப்புரையும் முடிவுரையும்**

நாவலர் பேராசை கொண்டு செயற்பட்டவர். அதனை அவரே ஒத்துக் கொண்டிருக்கின்றார். அது சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கின்ற கல்வியினையும் வளர்க்க வேண்டும் எனும் பேராசையாகும். அதனை நிறைவேற்றுவதற்காக தன்னுடைய வாழ்க்கையினையே அர்ப்பணித்துச் செயலாற்றியவர். அவருடைய இந்த பேராசையும் , அர்ப்பணிப்புமே இன்று இலங்கைத் திருநாட்டில் சைவம் நிலைத்திருப்பதற்கு காரணங்களில் முதன்மையானது என்பது நிதர்சனமானது. இத்தகைய பண்புடைய ஒருவர் அவதார புருசராகவே நோக்கப்பட வேண்டியவர். அவர் காட்டிய வழியில் பயணிப்பது இம்மைக்கும் மறுமைக்கும் நற்பயன் தருவதாகும். இதற்கு சைவம் போதிக்கும் பேருண்மைகளை கசடற கற்றுக்கொள்வதும் அவற்றை வழுவாது பின்பற்றுவதும் இன்றியமையாதவையாகின்றன. இவ்வாறு சைவர்கள் தங்களது மார்க்கத்தின் பேருண்மைகளை அறிந்திருப்பதானது அவர்களை அஞ்ஞானிகள் என்று வேற்று மதத்தினர் இழித்துரைக்கும் வாய்ப்பினை

வழங்காதிருக்கும். இதற்கான மிகப்பெரும் பொறுப்பினைக் கொண்டவர்களாக கோயில் அர்ச்சகர்களும் , பூசகர்களும் உள்ளனர். இவர்கள் தங்களை பொதுமக்களுக்கு அறிவொளி புகட்டக்கூடியவர்களாக வளர்த்துக்கொள்ள வேண்டும். அதேபோன்று அத்தகைய தகுதியுடையவர்களே கோயில்களில் கிரியைகள் செய்யவும் , பணியாற்றவும் நியமனம் செய்யப்பட வேண்டும். மிகவும் குறிப்பாக கோவில்கள் தங்களது வருமானத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியினை அதனுடன் தொடர்புபட்டு வாழ்கின்ற மக்களது ஆன்மீக , சமூக முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும். மாறாக தங்கமாகவும் , நிலமாகவும் சொத்துக்களைச் சேர்த்து திருவிழாக்கள் , அலங்காரங்கள், கட்டடங்கள், அன்னதானங்கள் என்று செயற்பட்டுக் கொண்டிருப்பது ஆலயங்களது உயர்வான நோக்கங்களாக இருக்க முடியாது. அவை மனித சிற்றின்ப தேவைகளை நிறைவேற்ற உதவுவதாக இருக்குமே தவிர ஆன்மீக முன்னேற்றத்திற்கோ சமூக வளர்ச்சிக்கோ பயனுடையதாக இருக்காது.

நாவலர் பெருமான் காத்தருளிய மார்க்கம் மக்களை நல்வழிப்படுத்துவதற்கான பொக்கிசங்களை தன்னகத்தே கொண்டுள்ள அளப்பெரும் சக்தியுடைய ஒன்றாகும். மறைபொருளாக இருந்த அந்த உண்மைகளை தன்னுடைய சீரிய செயற்பாடுகளின் ஊடாக பொதுத்தளத்தில் உள்ள அனைத்து மக்களும் இலகுவாக புரிந்துகொள்வதற்குரிய வாய்ப்பினை அவர் ஏற்படுத்தியுள்ளார். எனவே சிவதருமோத்தரம் எனும் உபாகமத்தில் குறிப்பிட்டபடி உத்தமத்திலும் உத்தமமான காரியமாக பொருளாசை கொள்ளாது அருளாசை கொண்டு சிவாகமங்களை அல்லது சைவ சமூகத்தை நல்லொழுக்கத்துடன் வளர்த்தெடுப்பதற்காக நாவலர் பெருமான் சிறப்புற உருவாக்கித் தந்துள்ள பாலபாட நூல்களில் உள்ள விடயங்களையாவது கற்றுணர்ந்து பின்பற்றுவதுடன் , கற்றுக்கொடுத்தல் எனும் காரியத்தையும் மேற்கொண்டு சைவ ஒழுக்க வாழ்வியல் ஊடாக நற்பேறு பெறவும் மேன்மைகொள் வைசநீதி உலகெல்லாம் விளங்க துணைநிற்பதும் காலத்திற்குகந்த கடமையாக உள்ளது.

சான்றாதாரங்கள்

[1] அம்மன்கிளி, மு. 1991. கைலாசபதியும் நாவலர் ஆய்வுகளும் இல் தாயகம் - கலை இலக்கிய மாத இதழ். (பக் 13 – 21). இலங்கை: தாயகம் பதிப்பகம்

[2] அறிவுடைநம்ப, ம. சா. (2012). சுவடிப்பதிப்பு முன்னோடிகள். இந்தியா: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

[3] ஆறுமுக நாவலர். (2003). பாலபாடம் இரண்டாம் புத்தகம். யாழ்ப்பாணம்: ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபை

[4] ஆறுமுக நாவலர். (1956). சைவதூஷண பரிகாரம். இந்தியா: வித்தியாநுபாலன அச்சகம்

[5] ஆறுமுக நாவலர். (1937). யாழ்ப்பாணச் சமயநிலை. இலங்கை: சைவவித்தியாவிருத்திச் சங்கம்

[6] இரத்தினம், கா.பொ. (1938). நாவலர் நினைவு மலர். சுன்னாகம்: ஈழகேசரி வெளியீடு

[7] பத்மநாதன், சி, ரூ இரகுபரன் , க. ( 2012). பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும் (தொகு.). இலங்கை: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

[8] கொழும்பு தமிழ்ச் சங்கம். (2012). சங்கத் தமிழ் - நாவலர் சிறப்பிதல். இலங்கை: ஆசிரியர்

[9] குமாரவடிவேல், இ. (2021). நாவலர் கல்வி மரபும் இன்றைய தேவையும். கனடா: சைவசித்தாந்த மன்றம்

[10] சீவரத்தினம், சி. (1962). நாவலர் சமயப் பணி. யாழ்ப்பாணம்: நாவலர் வித்தியாசாலை

[11] பூலோகசிங்கம், பொ. (2000). நாவலர் பண்பாடு. இந்தியா: காந்தளகம் வெளியீடு

[12] பாக்கியம், பொ. (1970). நாவலர் சரித்திர ஆராய்ச்சி. யாழ்ப்பாணம்: வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்கம்



© 2024, IRJTSR 